Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 7, 2025

திங்கட்கிழமை 07, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர்: 195 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## இந்திய சமையல்காரி கொக்கேனுடன் கைது

■ டி.கே.பி.கபில

இந்திய சமையல்கார பெண்ணொருவர் கொக்கேன் போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவிமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் ஞாயிற்றுக்கிழமை (06) கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2



## “வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் அசமந்தம்”

■ புகஜிந்தன்

இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்தி வரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவி வருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கமும் ஒன்றாக உள்ளது. ஆனால், வெள்ளை ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரையில் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தமாக உள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னை மரங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வெள்ளை ஈக்களின் தாக்கம் தேங்காய் உற்பத்தியைப் பாதித்து வருவது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் - சிங்கள மக்களின் உணவிலும் பண்பாட்டிலும் பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்ற தேங்காய்கள் ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்கு கணிசமான அந்நிய செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

தொடர்ச்சி P2

## “மித்ர விபூஷண விருது மாபெரும் கௌரவம்”



இலங்கை மக்களுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பைப் பாராட்டும் வகையில் ‘மித்ர விபூஷண’ விருது தனக்கு வழங்கப்பட்டமை தனக்குக் கிடைத்த மாபெரும் கௌரவமாகும் என இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# தமிழக மீனவர்கள் 11 பேர் விடுவிப்பு

மீனவர்கள் பிரச்சினையை மனிதாபிமான அணுகுமுறையுடன் தீர்வு காண வேண்டும் பிரதமர் மோடி வலியுறுத்தியதன் பின்னர், சிறப்பு நடவடிக்கையாக 11 தமிழக மீனவர்களை இலங்கை அரசாங்கம் விடுவித்துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்தவர்கள் கூறுகையில் சிறப்பு நடவடிக்கையாக 11 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## “எரிக்கப்பட்ட ஜனாஸாக்கள் முஸ்லிம்களின் ஆறாத வடுக்கள்”

அடிப்படை மனித உரிமைகளையும், மத உரிமைகளையும் மீறி பலவந்தமாக எரிக்கப்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்கள் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆறாத வடுக்களை விட்டுச் சென்றுள்ளன என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## போலி பூச்சிக்கொல்லி சிக்கியது



போலி பூச்சிக்கொல்லிகளை விற்பனை செய்து, 40 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் யக்கல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்

போலி பூச்சிக்கொல்லிகள் விற்பனை மற்றும் மோசடி தொடர்பாக யக்கல காவல் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரின் பேரில், தேடப்படும் சந்தேக நபர் ஒருவர் கடுகண்ணாவ பகுதியில் உள்ள ஒரு விடுதியில் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், யக்கல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு, சந்தேக நபரைக் கைது செய்தது.

தொடர்ச்சி P2



## “புத்தரின் போதனைகள் எமக்கு வழிகாட்டட்டும்”

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அனுராதபுரத்தில் உள்ள ஜய ஶ்ரீ மகா போதியில் ஜனாதிபதி திசாநாயக்கவுடன் இணைந்து, ஞாயிற்றுக்கிழமை (06) வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார்.

“பௌத்த மதத்தின் அதி சிறப்பு மிக்கதும் மதிப்புக்குரியதுமான ஸ்தலங்களில் ஒன்றான இத்தலத்தில் வழிபாட்டினை மேற்கொள்வது உண்மையில் மிகவும் பணிவுக்குரிய தருணமாகும். அமைதி, ஞானம் மற்றும் ஆன்மீக நீட்சியின் வாழும் குறியீடாக இத்தலம் திகழ்கின்றது. புத்த பெருமானின் போதனைகள் எப்போதும் எமக்கு வழிகாட்டட்டும்” என்று ஶ்ரீ மகா போதியில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## அச்சுத்துறையில் ரஞ்சித் வேலை

வெலிக்கடை சிறையில் 16 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன் கூடிய சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார் முன்னாள் வடமத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.. ரஞ்சித், அவர், சிறைச்சாலையின் அச்சுத் துறையில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலை ஆணையருமான காமினி பி.திசாநாயக்க கூறினார்.

தொடர்ச்சி P2

## யாழில் ஒன்றரை கோடி ரூபாய் மோசடி

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் ஒரு கோடி அறுபது இலட்சம் ரூபாய் பெறுமதியான பண மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நெல்லியடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வெளிநாடு செல்வதற்காக வட்டுக்கோட்டையை சேர்ந்த ஒருவரிடம் ஒரு கோடி அறுபது இலட்சம் ரூபாய் பணத்தினை கொடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அதிர்ஷ்ட ஆசையில் ரூ.50,000த்தை இழந்த ஆசிரியை

பதுளை பகுதியில் தொலைத்தொடர்பு வலையமைப்புகளை பயன்படுத்துவோரை இலக்கு வைத்து வங்கிக் கணக்குகளிலிருந்து பண மோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

பதுளை கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியை ஒருவர் இவ்வாறான பணமோசடி சம்பவத்திற்கு முகங்கொடுத்துள்ளார்.

ஒரு தொலைத்தொடர்பு நிறுவனத்தின் மெகா வாசனா பரிசளிப்புக்கு குறித்த ஆசிரியை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வந்த தொலைபேசி அழைப்பு உண்மையென நம்பி தனது மக்கள் வங்கி கணக்கிலக்கத்தையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அந்த ஆசிரியர் வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2



## போதையில் இருந்து சந்ததியினரை காப்பாற்றுமாறு கோரி போராட்டம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணிக்கபுரம் பகுதியில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தி தமது இளம் சந்ததியினரைக் காப்பாற்றுமாறு கோரி மக்கள் போராட்டத்தில், ஞாயிற்றுக்கிழமை (06) ஈடுபட்டனர்

மாணிக்கபுரம் பகுதியில் உள்ள பெண்கள் ஒன்றிணைந்து மாணிக்கபுரம் கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக தமது கிராமத்தில் போதைப்பொருள் பாவனையால் பல்வேறு சமூக சீரழிவுகள் இடம் பெற்று வருவதாகவும் அதனை உடனடியாக உரியவர்கள் கட்டுப்படுத்தி எமது இளம் சந்ததியினர் மற்றும் கிராம

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அசமந்தம்”

உற்பத்தியாகும் தேங்காய்கள் மூன்றில் இரண்டு பங்கு உள்ளூரில் நுகரப்பட, மூன்றில் ஒரு பாகம் உலர்ந்த தேங்காய்த் துருவல்களாகவும், தேங்காய் எண்ணெய்யாகவும் மதிப்புக் கூட்டி ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவற்றுக்கென ஆண்டுக்கு 4 பில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 3 பில்லியன் தேங்காய்கள் வரையிலேயே அறுவடை செய்யப்படுவதாகத் தெங்கு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தென்னையுடன் தொடர்புடைய இன்னொரு அமைப்பான தென்னை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த 2026ஆம் ஆண்டில் சுமார் நூறு மில்லியன் தேங்காய்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறது.

பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காகத் தேங்காய்ப்பால் உலர்ந்த தேங்காய் தூள், குளிர்ந்த தேங்காய்க்கூழ் ஆகியனவற்றை இறக்குமதி செய்ய அ செய்ய அரசாங்கம் முடிவு எடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

இதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் தம் வீட்டு வளவுகளில் உள்ள தென்னைமரங்களை உணவாதாரமாகவும் வாழ்வாதாரமாகவும் பயன்படுத்திவந்த மக்கள் இன்று அம்மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காயைச் சொட்டாகப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

பெருமெடுப்பில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முன்னெடுத்து வரும் அரசாங்கம் குப்பை கூழங்களையும் சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் வதையும் அத்திட்டத்தில் உள்வாங்க வேண்டும். விரைந்து செயற்படாவிடின் வீட்டினதும் நாட்டினதும் தெங்கு பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய சமையல்காரி...

ஆறு கோடியே 57 இலட்சத்துக்கு 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கொக்கேன் அவரது பயணப்பொதியில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

அவர் இந்தியாவின் மிசோரம் பகுதியைச் சேர்ந்த 29 வயது சமையல்காரரர். அவர் இதற்கு முன்பு மூன்று முறை இந்த நாட்டிற்கு வருகை தந்திருப்பது கடவுச்சீட்டைச் சோதித்த போது தெரிய வந்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டது, மேலும் அவர் கொண்டு வந்த சூட்கேஸின் போலி அடிப்பகுதியில், பொலிதீன் பொதிகளில் சுற்றப்பட்டு 1 கிலோ கிராம் 644 கிராம் கொக்கெயின் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

# தமிழக மீனவர்கள் 11 பேர் விடுவிப்பு

முன்னதாக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் மோடி, அந்நாட்டு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை கொழும்பில் சந்தித்துப் பேசினார். இரு நாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தையில் மீனவர் பிரச்சினை முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் திசாநாயக்கவுடன் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, “மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை குறித்து விவாதித்தோம். மீனவர் விவகாரத்தில் மனிதாபிமான அணுகுமுறையைப் பின்பற்றுவது என ஒப்புக்கொள்ளப்பட்டது. மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களின் படகுகளை ஒப்படைக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.” என்று தெரிவித்திருந்தார்.

இந்தியா இலங்கை நாடுகளுக்கு இடையே மீனவர்கள் பிரச்சினை நீண்டகாலமாக நீடித்து வருகிறது. தமிழகம் மற்றும் இலங்கைக்கு இடையில் இருக்கும் குறுகிய நீர்பரப்பான பாக் ஜலசந்தியில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் பலவந்தமாகத் தாக்குதல் நடத்துவதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இதனிடையே செய்தியாளர்களை சனிக்கிழமை (05) சந்தித்துப் பேசிய மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி, “பிரதமரின் உரையில் குறிப்பிட்டது போல, மீனவர்கள் பிரச்சினையில் மனிதாபிமான மற்றும் ஆக்கப்பூர்வமான அணுகுமுறை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் கடைசியில் இது இரண்டு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பிரச்சினை.

அந்தநாளின் இறுதியில், இது இரண்டு நாட்டு மீனவர்களின் அன்றாட பிரச்சினையாகி விட்டது, சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யலாம் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த விஷயத்தில் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகளைத் தீவிரப்படுத்த வேண்டிய அவசியத்தை இரு தரப்பும் வலியுறுத்தின” என்று தெரிவித்தார்.

## போலி பூச்சிக்கொல்லி...

சந்தேக நபர் கம்பஹா, கிடகம்முல்ல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர், கரையான்கள் மற்றும் பிற பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் பொருளைக் கொண்ட கொள்கலன்களில் அச்சிட்டு போலி பூச்சிக்கொல்லியை விநியோகித்தது தெரியவந்துள்ளது.

கிரியெல்ல, களனி, பமுனுகம, அவிசாவளை, ரம்புக்கனை, மல்வத்து ஹிரிபிட்டிய, கண்டி, வாதுவ, கொச்சிக்கடை, சபுகஸ்கந்த, தலாத்துஓயா, மொரட்டுமுல்ல, மாவத்தகம உள்ளிட்ட பல பிரதேசங்களில் போலியான பூச்சிக்கொல்லிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

## யாழில் ஒன்றரை கோடி ரூபாய் மோசடி

இந்நிலையில், அந்த பணத்தினை வாங்கிய நபர் அவரை வெளிநாட்டுக்கும் அனுப்பாமல், அந்த பணத்தினை திருப்பியும் கொடுக்காமல் மோசடி செய்துள்ளார்.

இது குறித்துப் பாதிக்கப்பட்ட நபர் காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். அந்தவகையில் மேற்படி குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எம்.உதயானந்தன் தலைமையிலான குழுவினர் சந்தேக நபரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இந்நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான், அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.

## அதிர்ஷ்ட ஆசையில்....

குறித்த தகவலை வழங்கிய சற்று நேரத்தில் அவரது வங்கிக் கணக்கிலிருந்து ரூபாய் 50 ஆயிரம் மீளப் பெறப்பட்டதாக தொலைபேசி குறுந்தகவல் அவருக்கு வந்துள்ளது. பின்னர் ஆசிரியை தமக்கு ஏற்பட்ட அவல நிலையை வாட்ஸ்அப்பில் குரல் பதிவிட்டு, தனக்கு நேர்ந்ததைப் பகிர்ந்து, ஏனைய நபர்களை விழிப்புடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் . பதுளை பகுதியில் ஆசிரியர்களை இலக்கு வைத்து இவ்வாறு பண மோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பண்டிகை காலத்தில் இவ்வாறான மோசடிகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதால் பொதுமக்கள் தமது பாதுகாப்பு தொடர்பாக அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# “புத்தரின் போதனைகள் எமக்கு வழிகாட்டட்டும்”

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில், மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, வெள்ளிக்கிழமை (04) இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரதமர் நரேந்திர மோடி, பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

இந்நிலையில், அனுராதபுரத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (06) விஜயம் செய்து, ஶ்ரீ மகா போதியை வழிபட்ட அவர், அங்கிருந்து இந்தியாவின் விசேட ஹெலியின் ஊடாக, ராமேஸ்வரத்தை சென்றடைந்தார்.

பாம்பன் - மண்டபம் இடையே ரூ.550 கோடி மதிப்பில் கட்டப்பட்ட நாட்டின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலத்தைப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்து, நாட்டுக்கு, ஞாயிற்றுக்கிழமை (06) அர்ப்பணித்தார்.

இந்தியாவுடன் ராமேஸ்வரம் தீவை இணைக்கும் வகையில் மண்டபம் கடற்கரையிலிருந்து, பாம்பன் கடற்கரை வரையிலும் கடலில் ரயில் பாலமும் அதன் நடுவே கப்பல் கடந்து செல்ல தூக்குப் பாலம் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு 24.02.1914இல் திறக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் நீளமான கடல் பாலம் ஆகும்.

# போதையில் இருந்து சந்ததியினரை காப்பாற்றுமாறு கோரி போராட்டம்

மக்களைப் பாதுகாக்குமாறு கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்

‘மதுவை ஒழிப்போம் மக்களை காப்போம்”, ‘உழைத்து வாழப் பழகு ஊரை அழித்து வாழாதே” , ‘போதைப்பொருளை ஒழிப்போம் விஷமிகளை அழிப்போம்”, ‘போதையால் ஊரை அழிக்கிறாயே உன் சந்ததி மட்டும் நிலைத்து வாழுமா”, போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்

இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரிடம் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்தோடு போராட்டத்தைத் தொடர்ந்து குறித்த பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபடுவதாக அடையாளப்படுத்தப்பட்ட மூன்று வீடுகளுக்குச் சென்ற மக்கள் அவர்களது வீட்டு வாசல்களில் பதாகைகளையும் காட்சிப்படுத்தி விட்டுச் சென்றிருந்தனர்.

## “எரிக்கப்பட்ட ஜனாஸாக்கள்...

பலவந்தமாக எரிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரார்த்தனை செய்யும் நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளை மீறி, கடந்த கொரோனா காலத்தில் கொவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் உடல்கள் கடந்த அரசாங்கத்தால் வலுக்கட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டன. இதனால், முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் உரிமை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இதன் பொருட்டு, கொரோனா தொற்றுக்குள்ளாகிய நிலையில் வலுக்கட்டாயமாக எரிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரார்த்தனை செய்யும் நினைவு தின நிகழ்வொன்று கொழும்பு- 06 இல் அமைந்துள்ள மரைன் கிராண்ட் வரவேற்பு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது.

இலங்கை முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், ஏற்பாட்டுக்குழுவின் அழைப்பின் பேரில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச கலந்து கொண்டு தனது வருத்தத்தையும் ஆதரவையும் தெரிவித்தார்.

இந்த ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் சில அரசியல் தலைவர்கள் அன்று முஸ்லிம்களின் உரிமைகளுக்காக முன்னிற்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இந்த உரிமைக்காகத் தொடர்ந்தும் குரல் எழுப்பி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# “மித்ர விபூஷண விருது...

இது தனக்கு மாத்திரமன்றி, இந்தியாவின் 140 கோடி மக்களுக்கும் கிடைத்த விருது என்றும் அது குறித்து ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும், இலங்கை மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில், சனிக்கிழமை (05) நடைபெற்ற கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் பிரதமர் நரேந்திர மோடி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இந்தியாவும் இலங்கையும் வரலாற்றுச் சிறப்புமிக்க உறவையும் ஆழமான நட்பையும் கொண்டிருப்பதாகவும், 2019 ஆம் ஆண்டில் மேற்கொண்ட விஜயம் மிகவும் உணர்ச்சிகரமான நேரத்தில் இடம்பெற்றது என்றும் சுட்டிக்காட்டிய பிரதமர், பிரதமராகப் பதவியேற்ற பிறகு இது இலங்கைக்குத் தாம் மேற்கொண்ட 04 வது பயணம் என்றும் தெரிவித்தார்.

மக்களின் துணிச்சல் மற்றும் தைரியம் பற்றி தாம் அறிந்திருப்பதால், இலங்கை வலுவாக மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்று தான் நம்புவதாகவும் இதன்போது இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கை முன்னேற்றப் பாதைக்குத் திரும்புவதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகவும் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

கௌரவமான நண்பராக இந்தியா தனது கடமையை நிறைவேற்றுவது பெருமைக்குரிய விடயம் என்றும், 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், கொவிட் நோய்த்தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அனைத்து சூழ்நிலைகளிலும் தனது அரசாங்கம் இலங்கை மக்களுடன் இணைந்து நின்றுள்ளதாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

“திருவள்ளுவரின்” திருக்குறளை மேற்கோள் காட்டி, பிரதமர் நரேந்திர மோடி, உண்மையான நண்பனையும் அவனது நட்பையும் தவிர வேறு எந்தப் பாதுகாப்பும் இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

அதன்படி, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணத்திற்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தது இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான நட்பின் பிரதிபலிப்பாகும் என்றும், இலங்கை ஜனாதிபதியைத் தனது முதல் வெளிநாட்டு நண்பராகப் பெறும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையிலும், மஹாசாகர் நோக்கிலும் இலங்கைக்குச் சிறப்பு இடம் உள்ளதாகவும் கூறிய பிரதமர் மோடி, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து கடந்த நான்கு மாதங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சம்பூர் சூரிய மின்சக்தி திட்டம் முதல் திருகோணமலையை வலுசக்தி மையமாக நிறுவுவது வரை இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் நன்மைகள் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் என்றும் இந்தியப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

உயர் மின்னழுத்த மின் இணைப்பு தொடர்பான ஒத்துழைப்பு இலங்கைக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை வழங்கும் என்றும், இலங்கையில் உள்ள மதத் தலங்களில் 5,000 சூரிய மின் கலங்களை நிறுவுவதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்திற்கு இந்தியா ஆதரவளிக்கும் என்றும், மக்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்காக இலங்கைக்கு 2.4 பில்லியன் ரூபாய் அன்பளிப்பு வழங்கயிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, விவசாயிகளின் நன்மைக்காக இலங்கையின் மிகப்பெரிய விவசாய களஞ்சியக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்க இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கியதையும் சுட்டிக்காட்டினார்.

நாளைய தினம் நவீனமயமாக்கப்பட்ட மஹவ-ஓமந்தை ரயில் பாதை மற்றும் மஹவ-அநுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பை மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளதாகவும், இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்காக 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கும், இலங்கையின் பல்வேறு பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 700 இளம் தலைவர்களுக்கு நல்லாட்சி பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சிகளுக்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் “சப்கா சாத் சப்கா விகாஸ்” நோக்குக்கு அமைய, அயல் நாடுகளின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும், அதன்படி, இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பின் போது வட்டி விகிதங்களைக் குறைக்கத் தீர்மானித்திருப்பதாகவும், அதனூடாக இலங்கை மக்களுக்குச் சலுகை மற்றும் வழி கிடைக்கும் என்றும் இந்தியப் பிரதமர் கூறினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பல நூற்றாண்டுகளாக ஆன்மிக மற்றும் உணர்வுப்பூர்வமான உறவு இருப்பதாகவும், அதை உறுதிப்படுத்தும் வகையில், 1960ஆம் ஆண்டு குஜராத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தரின் நினைவுச் சின்னங்களைத் தரிசிக்க எதிர்பார்ப்பதோடு அதனை இலங்கைக்கு வழிபாட்டுக்காகக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

அத்துடன், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், அனுராதபுரம் புனித நகரம், சீதாஎலிய கோவில் போன்ற சமய வழிபாட்டுத் தலங்களின் மறுசீரமைப்பிற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

இலங்கைக்கான தனது அரச விஜயத்தின் போது உயர் அரச கௌரவத்துடன் வரவேற்றமைக்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவிப்பதாகப் பிரதமர் நரேந்திர மோடி மேலும் தெரிவித்தார்.

தனது விஜயத்தை முடித்துக்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அனுராதபுரத்திலிருந்து ஹெலிகொப்டரில் தென்னிந்தியாவில் உள்ள ராமேஸ்வரத்திற்குப் புறப்பட்டார், அதே நேரத்தில், அவருடன் வருகைதந்திருந்த தூதுக்குழு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது.

இதற்கிடையில், அவர் X இல் பதிவிட்டதாவது, “எனது வருகையின் போது, வழங்கப்பட்ட அரவணைப்புக்கு ஜனாதிபதி திசாநாயக்க, மக்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“கொழும்பாக இருந்தாலும் சரி, அனுராதபுரமாக இருந்தாலும் சரி, இந்தப் பயணம் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான கலாச்சார, ஆன்மீக மற்றும் நாகரிக உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இது நமது இருதரப்பு உறவுகளுக்கு நிச்சயமாக உத்வேகம் அளிக்கும்." என குறிப்பிட்டுள்ளார்.

# அச்சுத்துறையில் ரஞ்சித் வேலை

ரஞ்சித்தை சிறையில் அடைத்த அதே குற்றச்சாட்டிற்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவரது உறவினர் வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை அவர் எந்த வேலையிலும் ஈடுபடுத்தப்படவில்லை என்றும் திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் அச்சுப் பிரிவில், சிறைத் தண்டனை அனுபவிக்கும் வெளிநாட்டுக் கைதிகள் அதிக அளவில் பணிபுரிவதாகவும், புத்தகப் பிணைப்பு, கோப்பு தயாரிப்பு போன்ற பல்வேறு பணிகளைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும்

மேல் நீதிமன்றத்தால் அவருக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்ட அச்சுப் பிரிவின் கடமைகளில் இருந்து எம்.ரஞ்சித் நீக்கப்பட உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.



# மூன்று அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பித்து வைப்பு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில், இந்நாட்டிற்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் விஜயத்துடன் இணைந்து, இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் நாட்டில் செயல்படுத்தப்படும் மூன்று அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு மற்றும் திறப்பு விழா சனிக்கிழமை(05) நடைபெற்றது.

தேசிய மின் கட்டமைப்பில் 50 மெகாவாட் மின்சாரத்தை இணைக்கும் சம்பூர் சூரிய மின்சக்தித் திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தம்புள்ளை விவசாயக் களஞ்சிய கட்டிடத்தொகுதி மற்றும் 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டம் திறந்து வைக்கப்பட்டது.

தேசிய மின் கட்டமைப்பில் 50 மெகாவாட் மின்சாரத்தை இணைக்கும் சம்பூர் சூரிய மின்நிலையத்தின் பணிகள் ஆரம்பித்தல், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தம்புள்ளை விவசாய களஞ்சி கட்டிடத் தொகுதி மற்றும் இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டம் ஆகியவை இணையவழி (online) தொழில்நுட்பம் மூலம் திறந்து வைக்கப்பட்டன.

இந்தியாவின் என்டிபிசி (NTPC) லிமிடெட் மற்றும் இலங்கை மின்சார சபை (CEB) ஆகியவற்றின் கூட்டு முயற்சியான திருகோணமலை மின்சார நிறுவனத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள சம்பூர் சூரிய மின் நிலையம், நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் (LTGEP) கீழ் நிறுவப்படவுள்ள வடகிழக்கு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வலயத்தின் ஒரு பகுதியாகும்.

சம்பூர் சூரிய மின் நிலையத் திட்டம் இரண்டு கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டம் 2027இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 500 ஏக்கர் பரப்பளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் 50 மெகாவாட் மின்சாரம் நாட்டின் தேசிய மின்சார விநியோகத்தில் இணைக்கப்படும்.

*N-type TOPCon solar cells* என்ற நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவப்படும் இந்த திட்டம், வலுசக்தி பாதுகாப்பை அதிகரிக்கும் என்றும், நாட்டின் வலுசக்தி அமைப்பை புதைபடிவ எரிபொருட்களை நம்புவதற்குப் பதிலாகப் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை நோக்கி மாற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, சம்பூர் சூரிய மின்நிலையத் திட்டம் ஆண்டுதோறும் வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படும் காபனீரொக்சைட் அளவை சுமார் 02 மில்லியன் டொன்கள் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம், பசுமையான எதிர்காலத்தை நோக்கிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கிறது.

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை சுமார் 40% குறைத்தல், விவசாயப் பொருட்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துதல், நுகர்வோருக்குத் தரமான உணவை வழங்குதல் மற்றும் விவசாய நிலைபேற்றுத் தன்மையை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், 5,000 மெட்ரிக் டொன் கொள்ளளவும், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ள தம்புள்ளை விவசாய களஞ்சிய கட்டிடத் தொகுதி (குளிர் கிடங்கு) இன்று திறந்து வைக்கப்பட்டது.

பல்வேறு பயிர்களுக்கான உகந்த சேமிப்பு முறைகள் குறித்த ஆராய்ச்சியை எளிதாக்குவதற்காக இந்த களஞ்சியத் தொகுதியில் ஆறு அறைகள் நிறுவப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு அறையும் வெவ்வேறு காலநிலை நிலைமைகளை உருவகப்படுத்தும் வகையில், கட்டமைக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதன்முதலில் நிறுவப்படும் இந்தக் களஞ்சிய கட்டிடத் தொகுதியின் மொத்தச் செலவு 524 மில்லியன் ரூபாவாகும். இதில், 300 மில்லியன் ரூபா இந்திய அரசாங்கத்தின் நன்கொடையாவதோடு, இதற்காக இலங்கை அரசாங்கம் 224 மில்லியன் ரூபாய்களை செலவிடுகிறது.

5,000 மதஸ்த் தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டம், நாடு முழுவதும் உள்ள 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாகவும், அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட 5,000 மதஸ்த் தலங்களில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டமாகும்.

இந்த திட்டத்தில் இந்திய அரசாங்கம் 17 மில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது, மேலும் இலங்கை மின்சார சபை, இலங்கை நிலைபெறுதற்கு வலு சக்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சார நிறுவனம் ஆகியவை இணைந்து இந்த திட்டத்தைச் செயல்படுத்துகின்றன.

அதன்படி, பௌத்த, இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களின் கூரைகளில் 5 kW கொள்ளளவைக் கொண்ட 5,000 சூரிய மின் கலங்கள் நிறுவப்படும். இது நாட்டின் வலுசக்திக் கட்டமைப்பில் 25 மெகாவாட் சூரிய மின்சக்தி திறனை இணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் செலவு குறைந்த, நிலைபேறான மற்றும் நம்பகமான வலுசக்தி அமைப்பை நோக்கிய அரசாங்கத்தின் நோக்கத்தை வலியுறுத்துகிறது.



தமிழ் கட்சிகளின் தலைவர்களுடன்...



மலையக கட்சிகளின் தலைவர்கள்...



மகிந்த ராஜபக்ஷவுடன்...



மைத்திரிபால சிறிசேனவுடன்...



கோட்டாபய ராஜபக்ஷவுடன்...



ரணில் விக்ரமசிங்கவுடன்...

# மோடியுடன் சந்திப்பு...

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, தமிழ் கட்சிகளின் தலைவர்கள், மலையக கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் சனிக்கிழமை (05) சந்தித்துக் கலந்துரையாடினர்.

# “உள்ளங்கையில் ஊதி சோதிப்பு”

## வட்டுக்கோட்டை பொலிஸார் அராஜகம்

நிதர்ஷன் வினோத்

வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்குமாறு சமூக செயற்பாட்டாளரான ந.பொன்ராசா, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அரச உத்தியோகத்தரான அவர், அலுவலகப் பணி முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வீதியில் நின்ற வட்டுக்கோட்டை பொலிஸார் தன்னை மறித்து மது போதையில் செல்வதாகக் கூறி சோதிப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்ல முற்பட்டதாகவும் அதற்குத் தாம் மறுப்பு தெரிவித்த போது தாக்க முற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,“2025.04.04 அன்று பிற்பகல் அலுவலக பணி முடித்து பால்மா பேணி ஒன்றையும் வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றேன். இதன்போது மாலை 6.50 மணியளவில் மூளாய் காளி கோயிலுக்கு சமீபமாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரு பொலிஸார் நின்றனர். நான் இடதுபுறமாகச் சென்றுகொண்டிருந்தபோது அவர்கள் வலது பக்கத்தில் ஒரு இளைஞனை மறித்து வைத்துக் கதைத்துக்கொண்டு நின்றனர்.

என்னைக் கண்டதும் இடது பக்கம் வந்த பொலிஸார் என்னை மறித்து எங்கே போகின்றீர்கள்? எங்கிருந்து வருகின்றீர்கள்? என்ன வேலை செய்கிறீர்கள்? என விசாரித்துவிட்டு சாரதி அனுமதிப்பத்திரம் காப்புறுதிப் பத்திரம் போன்றவற்றை என்னிடம் இருந்து வாங்கினர். ஏன் விசாரிக்கிறீர்கள் என கேட்டேன்.

இதன்போது, ஒரு பொலிஸார் தனது இடது கையை நீட்டி உள்ளங்கையில் ஊதுமாறு பணித்தார். சாராயம் குடித்திருக்கிறாய் சோதிக்க வேண்டும் என்றனர். எங்கே பார்ட்டிக்கு போய் வருகின்றாய் எனக் கேட்டனர். கையில் ஊதினால் எப்படி சோதிக்க முடியும்? பலூனில் தானே சோதிப்பது எனக் கேட்டேன்.

நான் திருப்பி கதைத்தவுடன் எனது மோட்டார் சைக்கிளைப் பூட்டி திறப்பை எடுத்துக்கொண்டனர். என்னை பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப் போவதாக அச்சுறுத்தினர். அடிக்க முற்பட்டனர். தமது மோட்டார் சைக்கிளை இயக்கி என்னை இடிப்பதற்கு முற்பட்டனர். எனது மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப் போவதாகவும் என்னை இறங்குமாறும் அச்சுறுத்தினர். இதன்போது நான் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பை மேற்கொண்டு இந்த இரு பொலிஸாரின் அச்சுறுத்தல் தொடர்பாக முறைப்பாடு செய்தேன். ஆனால், அங்கிருந்து எனக்கு சாதகமாக பதில் அளிக்கப்படவில்லை. என்னை மிரட்டிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் இலக்கத்தை நான் குறிப்பெடுத்தபோது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் பின்பக்கம் திரும்பி குனிந்து நின்று தனது ஆசனவாய்ப்பகுதியைக்காட்டி அதற்குள் இலக்கம் இருக்கு எடுக்குமாறு மிகக் கேவலமாக முறையில் நடந்துகொண்டார். என்னை பலமுறை தாக்க முற்பட்டனர். நான் பொலிஸ் நிலையம் செல்ல மறுத்தபோது பொலிஸ் வாகனத்தைக் கொண்டுவருமாறு தொலைபேசியில் யாருக்கோ கூறினர். 10 நிமிட நேரம் என்னை வீதியில் வைத்து அச்சுறுத்தினர்.

பின்னர் யாரோ ஒருவருடன் தொலைபேசியில் உரையாடினர். அவர் எனது விபரத்தைக் கேட்டறிந்து நான் ஒரு ஊடகவியலாளர் என இவர்களுக்குக் கூறினார். இதன் பின்னர் எனது ஆவணங்களைக் கையளித்துவிட்டு இது உனக்கு இறுதி எச்சரிக்கை என அச்சுறுத்தி விட்டுச் சென்றனர்.

நான் வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர். ஊடகவியலாளர், அரச உத்தியோகத்தர், சமூக செயற்பாட்டாளன். எனக்கே வீதியில் இந்த நிலை என்றால் ஏனைய சாதாரண அப்பாவிப் பொதுமக்களை பொலிஸார் எவ்வாறு நடத்துவார்கள்? அவர்களின் பாதுகாப்புக்கு யார் உத்தரவாதம்?

வட்டுக்கோட்டை பொலிஸார் ஏற்கனவே, சித்தங்கேணியை சேர்ந்த அலெக்ஸ் என்ற இளைஞரை பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கி படுகொலை செய்தனர். மேலும் பலரைச் சித்திரவதைக்கு உட்படுத்தியிருக்கின்றனர். கடந்த வருடம் பொன்னாலையில் அன்றாடச் சீவியத்திற்கே கஷ்டப்படும் அப்பாவிக் குடும்பம் ஒன்று குழாய்க் கிணறு வெட்டியபோது அனுமதி எடுக்கவில்லை எனக் காரணம் கூறி அவர்களிடம் இருந்து 8,000 ரூபா பணத்தை இலஞ்சமாகப் பறித்துச் சென்றனர்.

இவ்வாறு இவர்களின் அராஜகம் தொடர்ந்து செல்கின்றனர்.

எனவே, என்னை அச்சுறுத்திய மேற்படி இரு பொலிஸாருக்கும் கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் இருந்த எமது பிரதேச மக்களைப் பாதுகாக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். ” என்றார்.

# கஞ்சாவுடன் வேட்பாளர் கைது

மே மாதம் 6ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கருவலகஸ்வெவ பிரதேச சபைக்கு போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் தலைவர் ஒருவர், கஞ்சா வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் அனுராதபுரம் வீதி, சிரம்பியாடிய பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிடைத்த தகவலின் அடிப்படையில் கருவலகஸ்வெவ காவல்துறையினரும் இராணுவத்தினரும் இணைந்து சம்பந்தப்பட்ட இடத்தில் நடத்திய சோதனையின் போது, கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

# மனைவியை குத்திக் கொன்ற கணவன் கைது

மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்த கணவனைக் கைது செய்துள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோதர உயன அடுக்குமாடிக் குடியிருப்பின் முதல் மாடியில் உள்ள வீட்டில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தாயான 57 வயதுடைய ஆறுமுகன் அம்பிகா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், அவரது 22 வயது மகனும் தாக்குதலுக்குள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் அவரது இளைய மகனுடன் ஒரு அறையின் தரையில் மெத்தையில் தூங்கிக் கொண்டிருந்துள்ளதுடன், மூத்த மகனும் சந்தேக நபரும் அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்துள்ளனர்.

போதைப்பொருளுக்கு அதிக அடிமையான சந்தேக நபர், தனது மனைவி தூங்கும் இடத்திற்கு வந்து, அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரை கத்தியால் குத்தியுள்ள நிலையில் இதைத் தடுக்க முற்பட்ட இளைய மகனையும் கத்தியால் குத்திவிட்டு, தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மகன் தாக்கியதில் தாய் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

தனது மகன் தாக்கியதில் தாய் மரணமடைந்துள்ள சம்பவம் ஒன்று வாழைச்சேனை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நாவலடி - கேணி நகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(06) அன்று இடம்பெற்றுள்ளது.

யாசகம் பெற்று வாழ்ந்து வரும் 65 வயது மதிக்கத்தக்க தாயுடன், மன நலம் பாதிக்கப்பட்ட 46 வயதுடைய மகன் வாழ்ந்து வந்த நிலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் மகனை சந்தேகத்தின்பேரில் கைது செய்த வாழைச்சேனை. பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்களை தாக்கிய இளைஞர் குழு

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு-வள்ளிபுனம் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர் குழுவினர், அப்பகுதி பெண்கள் சிலரைத் தாக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வள்ளிபுனம் பகுதியில், சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர் குழுவால் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில், வள்ளிபுனம் பகுதியில் புதன்கிழமை(02) மாலை மகளிர் குழுவின் கூட்டமொன்று அமைந்துள்ள வீடொன்றில், இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அவ்வீட்டின் அருகே வந்ம, இளைஞர் குழு, கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்களைத் தகாத வார்த்தையால் திட்டியதுடன், பெண்கள் சிலரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.அதிலும் குறிப்பாகத் தலைக் கவசத்தினால் ஒரு பெண்ணின் தலைப் பகுதி மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கமைய, தாக்குதலுடன் தொடர்புடைய நால்வரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். எனினும் தாக்குதலுடன் தொடர்புடைய ஏனைய மூவர் இதுவரை கைது செய்யப்படவில்லை என தெரியவந்துள்ளது.

# போதையாகிவிட்ட சமூக ஊடகங்களின் பயன்பாடு

தகவல் தொடர்பு அறிவியல் கண்ணோட்டத்தில், நாம் தகவல் தொழில்நுட்ப யுகத்தின் மூன்றாம் கட்டத்தில் வாழ்கிறோம். அதாவது, தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய நவீன ஊடகங்கள், தகவல்களைப் புகாரளிக்கும் செயல்பாட்டில் பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் வெகுஜன ஊடகங்களை விஞ்சி முன்னணிக்கு வந்துள்ள ஒரு சகாப்தத்தில் நிற்கின்றோம்.

ஒரு கையடக்க சாதனம் மூலம் முழு உலகமும் உங்கள் விரல் நுனியில் உள்ளது. இணையத் தொழில்நுட்பத்தின் நேர்மறையான அம்சம் என்னவென்றால், அது உலகம் முழுவதும் உடனடி இணைப்பையும் இணைப்புகளை உலகமயமாக்குவதையும் அனுமதிக்கிறது.

இருப்பினும், கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கல்விப் பிரிவின் சமீபத்திய வெளிப்பாட்டில், இளைய தலைமுறையினர் மட்டுமல்ல, மூத்த தலைமுறையினரின் பெற்றோர்களும் நாளின் பெரும்பகுதியை சமூக ஊடகங்களில் உலாவுவதில் செலவிடுகிறார்கள், இதனால் குழந்தைகள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் பாதகமான விளைவுகளில் கல்வித் தேவைகளைப் புறக்கணித்தல், காதல் ஆர்வங்களை அவர்களின் மன முன்னுரிமைகளில் முதலிடத்தில் வைப்பது, சமூக தொடர்புகளின் முறிவு காரணமாக நெருங்கிய நட்பை உருவாக்குதல் மற்றும் தனிமையில் முடிவுகளை எடுப்பது ஆகியவை அடங்கும், இது மனச்சோர்வு போன்ற மன நிலைமைகளுக்கு வழிவகுக்கிறது என்று அது சுட்டிக்காட்டியது. சமீபத்திய காலகட்டத்தில் இளைஞர்கள் தங்கள் உயிரை மாய்ப்பதற்குத் தனிமை முக்கிய காரணியாக உள்ளது என்பது மேலும் வலியுறுத்தப்பட்டது.

இதேபோல், குழந்தைகள் மற்றும் பெண்கள் புலனாய்வுப் பணியகம் வெளியிட்ட தகவல்களின்படி, கடந்த ஆண்டு சமூக ஊடகங்களில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆபாசப் படங்கள் பகிரப்பட்டதாகப் பதிவாகியுள்ளது. முதிர்ச்சியற்ற அனுபவங்கள் காரணமாக இளைஞர்கள் ஒன்லைன் காதலுக்கு இரையாகி, பாலியல் புகைப்படங்களைப் பரிமாறிக்கொள்வது ஒரு போக்காக மாறிவிட்டது என்றும் அது கூறியது. எழும் சூழ்நிலைகளைச் சமாளிக்க முடியாமல், அவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளும் மன நிலைகளை நாடுகின்றனர் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இது இணையம் அல்லது சமூக ஊடகங்களின் தவறு அல்ல, மாறாக அதன் பயன்பாட்டின் தவறு. இது ஊடகங்களை முறையாகப் பயன்படுத்துவது குறித்த புரிதல் இல்லாததையே காட்டுகிறது. எளிமையாகச் சொன்னால்: இணையமும் சமூக ஊடகங்களும் மிகவும் மோசமான எஜமானர்களாக மாறிவிட்டன. படித்தவர் அல்லது படிப்பறிவில்லாதவர் என எதுவாக இருந்தாலும், இதற்குப் பலியாகியுள்ளனர்.

இப்போதெல்லாம், சமூக ஊடகப் பயன்பாடு பலருக்கு ஒரு போதைப் பழக்கமாகி விட்டது. இல்லையெனில், அது ஒரு பொதுவான பழக்கமாகிவிட்டது. ஊடகங்களை ஒரு தகவல் தொடர்பு கருவியாக மாற்றுவதில் உள்ள பலவீனம் காரணமாக, அது தவறாகப் பயன்படுத்தப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்பதை அங்கீகரிக்க முடியும்.

இங்குதான் மறுப்பை விடக் கட்டுப்பாடு அவசியம். இத்தகைய சூழலில்தான், வளர்ச்சியில் தனிநபர் ஆன்மீகத்தின் தாக்கத்தை சமூக மயமாக்கும் ஒரு வழிமுறை அவசியம். எனவே, தொழில்நுட்பத்தை மோசமான கருவியாக மாற்றுவதற்குப் பதிலாக, அதை ஒரு நல்ல கருவியாக மாற்றுவதற்கான வழிமுறைகளை உருவாக்குவது அவசியம். இத்தகைய முறைகள் பள்ளியிலிருந்து வகுப்பறை வரைக்கும், அங்கிருந்து சமூகத்திற்கும் அவசியமானவை.





தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# இந்திய அரசியல் நாடகத்தை கவனித்தல்

லக்ஸ்மன்

இந்தியாவிடம் இருந்து தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய, கற்கத் தவறிய விடயங்கள் பற்றி பலரும் சிந்திக்கிறார்கள். இருந்தாலும், இப்போதும் இந்தியாவையே தங்களுடைய அரசியல் தீர்வுக்காக நம்பியும் இருக்கின்றனர். அதே நேரத்தில், சிங்களவர்களும் இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன என்பதை மறந்தும் விடுகின்றனர். ஏனென்றால், தமிழர்களுடைய விடயத்தில் அவர்கள் இந்தியா தமக்குச் சார்பான நிலைப்பாட்டிலேயே இருக்கிறது என்பதால் அது மறுக்கப்படுவதாக இருக்கிறது என்பதே யதார்த்தம். உலக நடைமுறைகள், மாற்றங்களுக்கு ஏற்ப தமிழ்த் தேசிய அரசியல் கட்டமைக்கப்படாமையும், மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமையும், அனுசரிக்காமையும்தான் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் இதுவரையில் நிறைவேறா ஒன்றாக இருந்து வருவதற்கு காரணமாகும். கடந்த வார இறுதியில் நடைபெற்ற இந்திய பிரதமரின் இலங்கை வருகை விட்டுச் சென்றிருப்பதும் இதனையே ஆகும்.

2024 செப்டெம்பர் மாதம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுத் தலைவர் என்ற பெருமையைப் பிரதமர் நரேந்திர மோடி பெற்றுக்கொண்டார். அவருக்கு இலங்கை மித்ர விபூஷண் விருதை இலங்கை வழங்கியிருக்கிறது. அபிவிருத்தி ஒத்துழைப்பு, பொருளாதார உறவுகள், பாதுகாப்பு உறவுகள், நல்லிணக்கம், இந்திய இலங்கை மீனவர் பிரச்சினைகள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் மீளாய்வு செய்து கொண்டனர். அதே நேரத்தில், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் இந்தியா தொடர்ந்து உதவுவதற்குப் பிரதமர் உறுதியளித்திருந்தார். அந்த வகையில் ஜனாதிபதி அனுரகுமார பொருளாதார ஸ்திரம் குறித்துப் பேசிய கருத்து இந்த இடத்தில் அடிபட்டுப் போனது.

எரிசக்தி மின்சார துறைகளுக்கான உதவிகள், சம்பூர் சூரிய மின்சக்தி திட்ட நிர்மாணப் பணிகளின் ஆரம்பிப்பு மற்றும் பல்வேறு அபிவிருத்தி ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியுள்ளன.

இதற்கிடையில் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது விடுபட்டுப் போன இலங்கைத் தமிழர்கள் விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் பேசியிருப்பது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. இந்தியப் பிரதமரின் ஊடக அறிக்கையில், இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும் இலங்கை அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான வாக்குறுதியை நிறைவேற்றும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தியப் பிரதமரின் அபிவிருத்தி, இந்திய மீனவர் பிரச்சினை போன்ற பல்வேறு கருத்துக்களுக்கு பதிலளித்திருக்கிற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தமிழர்களுடைய அரசியல் அபிலாசை, மாகாண சபை; தேர்தல் போன்ற விடயங்கள் குறித்து ஒரு வார்த்தையேனும் பகரவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். இந்தியப் பிரதமர் வட கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்திருக்கிறார். மலையக அரசியல் தலைவர்களைச் சந்தித்திருக்கிறார். பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், தமிழரது அரசியல், தமிழ் அரசியல் தரப்பினருடைய நிலைப்பாடுகள் காரணமாக இறுக்கமான முடிவுகளுக்கு உரியதாக இல்லை என்ற குறைபாடே காணப்படுகிறது என்று கொள்ளலாம்.

ஜே.வி.பியைத் தலைமையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் மாற்றம் என்கிற அலையில் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய அரசியல் அடிபட்டுப் போனது எல்லோருக்கும் வெளிப்படையானது. இந்த நிலையில், உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவிருக்கிறது. கடந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே அனுரகுமார திசாநாயக்கவை இந்தியா, புதுடெல்லிக்கு அழைத்துப் பேசியது. அது அவர்களுக்கு மேலும் ஒரு சக்தியைக் கொடுத்திருந்தது. இதனையடுத்து, அனுரகுமார ஜனாதிபதியானதும் முதல் விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார். இப்போது உள்ளூராட்சித் தேர்தல் நடக்கவுள்ள சூழலில் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வந்திருக்கிறார். அது கூடவும் அவர்களுக்குச் சாதகமாகவே அமையும். அதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

வடக்குக் கிழக்கில் உருவாகியிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் வெறுப்பு என்கிற பாதகத்தை விளங்கிக் கொள்ளாத தமிழ்த் தேசிய அரசியல் கட்சியினர் இப்போதும் தமது வெறுப்புணர்வுகளையும், வெப்பு சாரங்களையும் கோப தாபங்களையும், இறுமாப்புகளையும், வெட்டுக்குத்துக்களையுமே வெளிப்படுத்தியே வருகின்றனர். உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் கூட இவ்வாறான சிந்தனைகளும் செயற்பாடுகளும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினரிடம் காணப்படுவது நல்லவிதமான முன்னேற்றத்தைக் கொடுக்கப்போவதில்லை. அது தமிழர்களின் அபிலாசை நிறைவேற்றத்துக்கு எதிரான நிலையைத் தொடர்ந்து வலுப்படுத்தும். இது தமிழ்த் தேசிய அரசியலுக்குப் பாதகமானது.

வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் போராட்ட இயக்கங்களிடையே இருந்த ஒற்றுமை சீர்குலைவை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகளை உருவாக்கிக் கொண்டது. அதே நேரத்தில், அண்டை நாடான இலங்கையின் இனப்பிரச்சினை தமக்குச் சாதகமான மாற்றிக் கொண்டது. பயன்படுத்தவும் ஆரம்பித்தது. அது இந்தியாவுக்கு அதிக பயனையே கொடுத்தது எனலாம்.

எப்போதும் இந்தியா கைக்கொள்ளும் தமக்குச் சாதகமான ஆட்சிகளையே வைத்துக்கொள்ளல் நிலைப்பாடு ஒவ்வொரு நாட்டிலும் வாய்ப்பதில்லை. ஆனால், நாடி பிடிப்புக்காக அனுரகுமாரவை இந்தியாவுக்கு அழைத்ததன் காரணமாக இப்போது ஒரு சிறப்பான நட்பு அரசாங்கமாக அதனைப் பயன்படுத்துகிறது என்று கூறலாம். அது இலங்கை மித்ர விபூஷண் இந்தியப் பிரதமருக்கு வழங்கும் அளவுக்கு நிலைமை ஏற்படுத்தியிருக்கிறது. தாங்கள் தவறு செய்துவிட்டோமோ என்று தலையில் கை வைக்காமல் அதனையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலே இப்போது நடைபெறுகிறது. இது இலங்கைக்கும் பொருந்தும்.

இந்த இடத்தில்தான், தமிழ்த் தேசிய அரசியலின் ஒற்றுமை முக்கியம் உடையதாக இருக்கிறது. இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு வெறுமனே புதிய அரசியலமைப்போ, அரசியலமைப்புத் திருத்தம் தீர்வாக அமைந்து விடப் போவதிதில்லை. இதய சுத்தியுடனான அதிகாரப் பகிர்தல் ஒன்று நடைபெற வேண்டும். அதற்குச் சிங்கள அடிப்படைவாதம் இடம் கொடுக்க வேண்டும். அது ஒற்றையாட்சியை உடைய இலங்கையில் ஒருபோதும் சாத்தியமில்லை.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடா கொள்கையை கடைபிடித்து வரும் இந்தியா தம்முடைய முழுமையான பங்களிப்புடன் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தத்தைக் கூட முழுமையாக அமல்படுத்துங்கள் என்று அழுத்தம் கொடுப்பதில்லை. ஆனால், இலங்கை அரசு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றம், இலங்கை அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துதல், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துதல் என்பவை 13ஆவது திருத்தத்தையே சுட்டி நிற்கிறது என்ற வகையில் இந்தியா ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பது தெரிகிறது.

இலங்கை அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்தியப் பிரதமரின் இக்கருத்து தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியானதாக இருக்க வேண்டும். இருந்தாலும் தமிழ் அரசியல் தலைவர்களிடம் இல்லாத ஒற்றுமை காரணமாக அதன் பயன் முழுமையாகத் தமிழர்களுக்குக் கிடைக்காது என்றே சொல்ல வேண்டும்.

ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைகளை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிற தமிழர்கள் தமிழரின் பாரம்பரிய பூமியான வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலேனும் குறைந்தது ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி முறையை அமைப்பது தொடர்பில் இந்தியா முயற்சிகளை மேற்கொள்ளுமாக இருந்தால் சிறப்பு.

அவ்வாறானால், ஒருமித்த தமிழர் நிலைப்பாடு ஒன்றுக்குத் தமிழ்த் தரப்பு வருதல் முக்கியமாகும். அதே நேரத்தில் தமிழ் மக்களின் நிலைப்பாடுகளைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசிய அரசியலின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்தல் உடனடியாக நடைபெற வேண்டும். அதற்குக் காலம் தாழ்த்துதல் கூடாது. பூனைக்கு மணி கட்டுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனைக் கட்டாது தவறவிட்டால் இறுதியில் பூனையைத் தேட வேண்டி ஏற்படலாம்.

இங்கு நடைபெற்ற யுத்தத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்த இந்தியா தமிழீழ விடுதலைப் போரை நசுக்குவதிலும், இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் காரணமாக அமைந்திருந்தது, அதனால்தான், போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களை ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் மூலம் சட்டத்தின் முன் நிறுத்தக் கோரி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் புலம்பெயர் மக்களின் நீதிக்கான போராட்டங்கள் ஊடாக தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, இந்தியா தான் அதை நீர்த்துப் போகச் செய்தது. இன்னொரு விதத்தில். இந்தியா வல்லாதிக்கம் அரசியல் நாடகத்தை அரங்கேற்றுவதாக அமைந்துவிடாமல் பார்த்துக் கொள்ளல் முக்கியம்.



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய் விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாய நிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுவுமே முழுமையாகாது. நிஜ வாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### மழை நீரால் மாணவர்களுக்கு பாரிய சிரமம்

ஹட்டன் ஹைலன்ஸ் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லும் வீதியில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுவதால், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைக்குச் செல்லும் வீதியில் முறையான வடிகால் அமைப்புகள் இல்லாததால், மழைநீர் வீதியில் வழிந்தோடியுள்ளது. இதனால் அந்தப் பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த மாணவர்களின் பெற்றோர்கள் , மழைநீர் இந்த வீதியூடாக ஓடுவதால், தங்கள் குழந்தைகளின் பாதணிகள் நனைந்து பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாகக் கவனம் செலுத்தி, இங்குள்ள வடிகால் அமைப்பை முறையாக சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

- சுதத் எச்.எம்.ஹேவா





ஸ்ரீ நரேந்திர மோடிக்கு

# ‘ஸ்ரீலங்கா மித்ர விபூஷண’ விருது

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடிக்கும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையில், ஜனாதிபதி செயலகத்தில் சனிக்கிழமை (05) நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து, ஜனாதிபதி இந்த விருதை இந்தியப் பிரதமருக்கு, இலங்கை மக்களுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பைப் பாராட்டும் வகையில் “ஸ்ரீலங்கா மித்ர விபூஷண” விருதை, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வழங்கினார்.







# ஸ்ரீ மகா போதியில் வழிபாடு...

இலங்கைக்கு விஜயத்தை மேற்ககொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அநுராதபுரத்தில் உள்ள ஜய ஸ்ரீ மகா போதியில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து வழிபாடு செய்துள்ளார்.





# மோடிக்கு சஜித் வழங்கிய பரிசு

வில்பத்து தேசிய பூங்காவிலுள்ள கண் பார்வையை இழந்த ‘ஐ-ஒன்’ (eye-one) என அழைக்கப்படும் பெண் புலியின் சிறப்புப் புகைப்படத்தை, இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சனிக்கிழமை (05) அன்று வழங்கியுள்ளார்.

ஒரு கண் பார்வை இழந்திருந்தாலும், காட்டின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு வாழும் இந்த சிறப்பான விலங்கு, இலங்கையின் இயற்கை பாரம்பரியம் மற்றும் அழகின் உண்மையான சின்னமாகும்.

அதன் கவர்ச்சிகரமான நீல கண் சவால்களை எதிர்கொண்டு அதன் வாழ்க்கை பற்றிய நீண்ட கதையைச் சொல்கிறது. ஒருவேளை, குளுகோமா (glaucoma), கெடரெக் (cataract), அல்லது ஏதாவது விபத்து காரணமாக ஏற்பட்ட நிலையாகும். ஆனால், அது காட்டில் பாதுகாப்பாக உறுதியாக இருப்பது விலங்குலகின் சவால்களை வெற்றிகொள்வதற்கான சின்னமாகும். எவ்வாறாயினும், துரதிருஷ்டவசமாக இந்த சிறப்பு விலங்கு கடந்த சில ஆண்டுகளாகக் காணப்படவில்லை, மேலும், அது உயிருடன் இருக்கிறதா? என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.





















# ரயில் சமிக்ஞை அமைப்பை திறந்து வைத்தார் மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை(06) அனுராதபுரத்துக்கு, விஜயம் செய்த நிலையில், இந்திய அரசின் உதவியுடன் புதுப்பிக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையில் மாஹோ -அனுராதபுரம் ரயில் சமிக்ஞை அமைப்பை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்ததுடன், புதுப்பிக்கப்பட்ட மாஹோ-ஓமந்தை பாதையையும் திறந்து வைத்தார்.

இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் கலந்து கொண்டார்.

# மோடிக்கு விசேட இராபோசனம்...

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், விசேட இரா போசனம், சனிக்கிழமை (06) இரவு வழங்கப்பட்டது..




எமது இறக்குமதி வரி விதிப்பை மீட்டுப் பார்க்க வைக்கும்

# ட்ரம்பின் வரி விதிப்பு



ச.சேகர்

சில மாதங்களாக பரவலாக எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்பின் சர்வதேச இறக்குமதி வரி விதிப்பு பற்றி, கடந்த வாரம் அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்ததை தொடர்ந்து, உலகம் முழுவதும் பல தளம்பல்களை அவதானிக்க முடிந்திருந்தது.

அமெரிக்காவின் பிரதான எதிரியாகக் கருதப்படும் சீனா, இந்த வரி விதிப்புக்கு எதிராக, தாமும் அமெரிக்கப் பொருட்கள் இறக்குமதிக்கு வரி விதிப்பை அதிகரிக்கவுள்ளதாகப் பதிலடி கொடுக்கும் வகையில் அறிவித்துள்ளது.

இந்த வரிசையில், அமெரிக்கா இலங்கைக்கு 44 சதவீதம் வரி விதிப்பை அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை மேற்கொள்கையில், அமெரிக்க அதிபர், இலங்கையினால் அமெரிக்கப் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரியின் அளவு பற்றி ஏளனமாகக் குறிப்பிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை 88 சதவீத வரிவிதிப்பைக் கொண்டுள்ளது. அமெரிக்கப் பொருட்களுக்கு அதிகளவு இறக்குமதி வரி விதித்துள்ள நாடுகள் வரிசையில் இலங்கை உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளது.

இலங்கையின் சர்வதேச விவகாரங்களில் அவதானம் செலுத்தியவர்கள் ஓரளவு உறக்க நிலையில், அல்லது இலங்கைக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்று துளியளவிலும் சிந்தித்துக்கூடப் பார்க்காத நிலையில் இருந்திருப்பார்கள் போலும். ஏனெனில், அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியாகிய கடந்த வியாழக்கிழமை காலைப்பொழுதில், நாட்டின் வணிகத் துறை அமைச்சர் முதலில் ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவலில், இலங்கைக்கு இதனால் பெருமளவில் பாதிப்பு ஏற்படாது என்பதைப் போன்றதொரு கருத்தைக் குறிப்பிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, அரசாங்கத்தின் பொருளாதார நிபுணர்களில் ஒருவராக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் அமைச்சர் ஒருவர் குறிப்பிடுகையில், இந்த வரிவிதிப்பு இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும், இது பற்றி அமெரிக்காவுடன் கலந்துரையாட நாம் தயாராக இருக்கிறோம். அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது தற்போது அறவிடப்படும் 88 சதவீத வரியை நீக்குவது அல்லது அதனை ஒற்றை இலக்க பெறுமதி வரை குறைப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராயத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அரசாங்கமும் இந்த வரி விதிப்பால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஆராய நிபுணர் குழுவொன்றை நியமித்திருந்தது.

உண்மையில் இந்த வரி விதிப்பினால் இலங்கையின் நிலை என்ன? என்ன நடக்கப்போகிறது? அமெரிக்காவுக்கு இலங்கையிலிருந்து அதிகளவில் என்ன ஏற்றுமதி செய்யப்படுகிறது? இவ்வாறான கேள்விகளுக்கான பதில்களைப் பார்க்கும் போது, இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 20-25 சதவீதமானவை அமெரிக்காவுக்கு செல்கின்றன. அதில் ஆடை உற்பத்திகள் முதலிடம் பெறுகின்றன. குறிப்பாக, பெண்களுக்கான உள்ளாடைகள் மற்றும் விளையாட்டுகள், உடற்பயிற்சிகளின் போது அணியும் ஆடைகள் இதில் அதிகம் அடங்கியுள்ளன. அதனைத் தொடர்ந்து, வாகன டயர் வகைகள் போன்ற இறப்பர் உற்பத்திகள், கருவா போன்ற வாசனைத்திரவியங்கள் மற்றும் சில விவசாய உற்பத்திகள் ஏற்றுமதியாகின்றன.


அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் பண்டங்களின் பெறுமதி சுமார் 300  400 மில்லியன் டொலர்களாக அமைந்திருந்த போதிலும், இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் பெறுமதி 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்துள்ளன.

இந்த வரி விதிப்பின் காரணமாக அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் விலைகள் பெருமளவு அதிகரிக்கும். இதனால் அமெரிக்கர்களின் இறக்குமதி நுகர்வு குறைவடையும். இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்கள் அத்தியாவசியமற்ற பொருட்களாக அமைந்திருப்பதன் காரணமாக, அவற்றை நுகர்வதை அந்நாட்டு மக்கள் குறைக்கலாம். இதனால் அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சியடையும். ஆடைகள் ஏற்றுமதியில் இலங்கைக்குப் போட்டியாளராகத் திகழும் பங்களாதேஷை எடுத்துக்கொண்டால், அந்நாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியின் அளவு இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ளதை விட குறைவானதாக அமைந்துள்ளது. அதுபோன்று, இந்தியாவுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி விதிப்பனவும் குறைவானதாக அமைந்துள்ளது. இந்நிலையில், ஆடை இறக்குமதியில் இலங்கையின் தயாரிப்புகள் மீதான விலை பெருமளவு அதிகரிப்பதன் காரணமாக, பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை நுகரும் தன்மை அங்கு அதிகரிக்கும். இதனால் இலங்கையின் ஏற்றுமதி குறைவடையும்.

இதனால், இலங்கையில் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக உற்பத்தியில் ஈடுபடும் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு கிடைக்கும் ஓடர்கள் வெளிநாடுகளுக்கு மாற்றப்படலாம். அதனால், உள்நாட்டில் ஆடைத் தொழிற்துறையில் பணியாற்றுவோருக்கு வேலை வாய்ப்புகள் இல்லாமல் போகும் நிலை ஏற்படலாம்.

இலங்கை ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, அதிலிருந்து மீண்ட வண்ணமுள்ளது. அந்நியச் செலாவணி இருப்பு, வரத்து என்பது இலங்கைக்கு கண்டிப்பான தேவையாக அமைந்துள்ளது. ஆடை உற்பத்தி தொழிற்துறை என்பது, இலங்கைக்கு அந்நியச் செலாவணியைத் தேடித்தரும் முக்கிய துறைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. அதில் சுமார் 20 முதல் 25 சதவீதம் பாதிப்படையும் என்பது, நாட்டின் பொருளாதாரத்தில் உணரக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக, அமெரிக்க டொலரின் பெறுமதி தற்போது பேணப்படும் சராசரி 300 ரூபாய் எனும் பெறுமதியிலிருந்து அதிகரிக்கக்கூடிய நிலை எழும். இதனால் ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கூட உள்நாட்டில் அதிகரிக்கும் சூழல் ஏற்படும். இன்னும் எளிமையாகக் குறிப்பிடுவதானால், இலங்கை வருமானமாகப் பெறும் 5 அமெரிக்க டொலர்களில் 1 அமெரிக்க டொலர் அமெரிக்காவிலிருந்தே இலங்கைக்கு வருகிறது.

இவ்வாறான சூழலில், எமது இறக்குமதி வரி முறைமை தொடர்பில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள இந்த அரசாங்கத்தினால் மீண்டும் கவனம் செலுத்தக்கூடிய ஒரு சிறந்த காலப்பகுதி எழுந்துள்ளது. அமெரிக்காவுடன் வரி விதிப்பு பற்றி பேச முன்வந்துள்ள இந்த அரசாங்கம், தற்போது அமுலிலுள்ள இலங்கைக்கான ஒட்டு மொத்த இறக்குமதி வரி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும். அரசாங்கத்தின் கடந்த கால தேர்தல் வாக்குறுதியிலும் புதிய இறக்குமதி வரிக்கொள்கை அறிமுகம் செய்யப்படும்



Reciprocal Tariffs

| Country | Tariffs Charged to the U.S.A. Including Currency Manipulation and Trade Barriers | U.S.A. Discounted Reciprocal Tariffs |
|---|---|---|
| China | 67% | 34% |
| European Union | 39% | 20% |
| Vietnam | 90% | 46% |
| Taiwan | 64% | 32% |
| Japan | 46% | 24% |
| India | 52% | 26% |
| South Korea | 50% | 25% |
| Thailand | 72% | 36% |
| Switzerland | 61% | 31% |
| Indonesia | 64% | 32% |
| Malaysia | 47% | 24% |
| Cambodia | 97% | 49% |
| United Kingdom | 10% | 10% |
| South Africa | 60% | 30% |
| Brazil | 10% | 10% |
| Bangladesh | 74% | 37% |
| Singapore | 10% | 10% |
| Israel | 33% | 17% |
| Philippines | 34% | 17% |
| Chile | 10% | 10% |
| Australia | 10% | 10% |
| Pakistan | 58% | 29% |
| Turkey | 10% | 10% |
| Sri Lanka | 88% | 44% |
| Colombia | 10% | 10% |

என குறிப்பிடப்பட்டு உள்ளதை நாம் இப்போது மீண்டும் நினைவூட்ட விரும்புகிறோம்.

இறக்குமதி வரி குறைக்கப்படுவதுடன், அவை எளிமைப்படுத்தப்பட வேண்டும். சுங்க வரிக்கு மேலதிகமாக அறவிடப்படும் CESS, PAL போன்ற இதர வரிகள் அகற்றப்பட்டாலே, இறக்குமதி வரி குறைந்துவிடும். விதிக்கப்படும் இறக்குமதி வரி உறுதியான பெறுமதிகளாக, இலகுவாகப் பின்பற்றக்கூடியதாக இருத்தல் வேண்டும். சாதாரணமாக, இறக்குமதிகளில் ஈடுபடுவோருக்கு இலங்கையின் இறக்குமதி வரி விதிப்பு எந்தளவு சிக்கல்கள் நிறைந்தது என்பது நன்கு தெரியும். இதனூடாக உள்நாட்டில் சுங்க வரித் திணைக்களத்தில் நடைபெறும் மோசடிகள், ஊழல்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். அந்த உறுதியான தீர்மானத்தை இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் இறக்குமதி வரி நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கிறது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பதால், தரமான தயாரிப்புகளை தமது தேவைகளில் பயன்படுத்தும் உரிமை மக்களுக்கு மறுக்கப்படுவதுடன், தெரிவுகளும் குறைந்து, விலையில் குறைந்த, தரத்திலும் குறைந்த தயாரிப்புகளுக்கு மக்கள் நாட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில், இறக்குமதி வரியினூடாக, அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கிறது, அதனைக் குறைப்பதால் அல்லது நீக்குவதால், அரசின் வருமானம் குறையும் என பிரதிவாதங்கள் எழுந்தாலும், மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரிக்கும் போது, மக்கள் மீது நேரடியாக வரி அறவிட்டு, இழந்த தொகையைச் சீர் செய்து கொள்ளலாம்.

நாட்டின் ஏற்றுமதிக்காக அமெரிக்கா தவிர்த்து மாற்று நாடுகளை உடனடியாக நாட வேண்டிய தேவை இலங்கைக்கு நிலவுகிறது. இதனை அரசாங்கத்தினால் நேரடியாக மேற்கொள்ள முடியாவிடினும், அதற்கான உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கலாம். எவ்வாறாயினும், அமெரிக்க ஜனாதிபதி தாம் விதித்துள்ள இந்த வரியை மீள்பரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளதாகச் சர்வதேச செய்திச் சேவைகள் குறிப்பிட்டுள்ளமை ஒருவிதமான நேர்த்தியான சமிக்ஞையை வழங்கியிருந்தாலும், அமெரிக்காவுடன் இலங்கை பேச்சு வார்த்தைக்குச் செல்லும் முன்னர், அமெரிக்கப் பொருட்களுக்கு இலங்கை விதித்துள்ள வரியை நீக்கி அல்லது அதில் கணிசமான குறைப்பை மேற்கொண்டு, அந்த தகவலுடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றால், சாதகமான பெறுபேற்றைப் பெறக்கூடியதாக இருக்கும் என்பது எமது அவதானிப்பாக உள்ளது.

# கொமர்ஷல் வங்கியின் 'TradeLink' அறிமுகம்




கொமர்ஷல் வங்கி, இலங்கையின் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு, அவர்களின் அனைத்து வர்த்தக நிதியியல் தேவைகளையும் இலகுவில் நிறைவேற்றும் வகையில் ComBank TradeLink' எனும் அதிநவீன டிஜிட்டல் தளத்தை ஏற்படுத்தியுள்ளது.


'ComBank TradeLink' ஒரு தடையற்ற, நுண்ணிய வகையில் இயக்கப்படுகின்ற, பயனாளிகளுக்கு நட்புறவான மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான டிஜிட்டல் தளமாகும் ஆகும். இது முழு வாடிக்கையாளர் பயணத்தையும் உள்ளடக்கிய இறுதி-முனை தீர்வுகளை வழங்கும் வகையில், வர்த்தக நிதியியல் பரிவர்த்தனைகளை எளிதாக்கி துரிதப்படுத்துவதுடன் மற்றும் இணக்கத்தை ஊக்குவிக்கிறது என்று வங்கி தெரிவித்துள்ளது.

ComBank TradeLink ஐ பயன்படுத்தும் இறக்குமதியாளர்கள், இறக்குமதி கடன் கடிதங்கள், இறக்குமதி சேகரிப்பு ஆவணங்கள், கப்பல் உத்தரவாதங்கள் மற்றும் முன்பண ஆவணங்கள், திறந்த கணக்கு கொடுப்பனவுகள், முற்பண கொடுப்பனவுகள் மற்றும் உத்தரவாதக் கடிதங்கள் போன்ற விடயங்களுக்கு 24x7 நிகழ்நேர டிஜிட்டல் அணுகலைப் பெறக்கூடியதாக இருக்கும்.

ஏற்றுமதியாளர்கள் இந்த நிகழ்நேர வளத்தின் மூலம் ஏற்றுமதி கடன் கடிதங்கள் மற்றும் ஏற்றுமதி சேகரிப்பு ஆவணங்கள் ஆகியவை தொடர்பாக அணுகக் கூடியதாக இருக்கும், இது அவர்களின் ஏற்றுமதி தொடர்பான பரிவர்த்தனைகளை விரைவுப்படுத்துவதுடன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துகிறது.

இந்த தளமானது அனைத்து துறைகளிலிருந்தும், பல்வேறு அளவுகள் மற்றும் திறன்களைக் கொண்ட வர்த்தகர்களை ஆதரிப்பதுடன், மேலும் அவர்களுக்கு வங்கியுடன் மற்றொரு தொடர்பு பாதையை வழங்கும்.

'கொமர்ஷல் வங்கி, ஆரம்பத்திலிருந்தே, வர்த்தக நிதித் துறையில் முன்னணி ஸ்தானத்தில் இருந்து வருவதுடன், மேலும் வரலாற்று ரீதியாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயற்பாடுகளில் நாட்டின் மிகப்பாரிய வசதிகளினை வழங்கும் தனியார் நிறுவனமாகவும் திகழ்ந்து வருகிறது,' என்று கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான சனத் மனதுங்க கூறினார். 'வர்த்தக நிதியியல் வசதிக்கான இந்த உறுதிப்பாட்டின் மரபு இந்த சமீபத்திய முயற்சியுடன் தொடர்கிறது, இது, இந்தத் துறையில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய மாற்றங்களுடன் விரிவடைந்து பரிணமிக்கும் விரிவான நிகழ்நேர சேவைகளுடன் வர்த்தக நிதியை டிஜிட்டல் துறைக்கு எடுத்துச் செல்லும்' என மேலும் குறிப்பிட்டார்.



டிஜிட்டல் பொருளாதாரத்தை மாற்றுவதற்கு

# ஜப்பான் உதவி

ஜப்பானின் "டிஜிட்டல் டெரஸ்ட்ரியல் தொலைக்காட்சி ஒளிபரப்பு திட்டம்" திட்டத்தின் விரிவான வடிவமைப்பிற்கான ஆலோசகர் ஒப்பந்தம், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க மற்றும் ஜப்பானிய நிறுவனமான யச்சியோ இன்ஜினியரிங் இடையே கையெழுத்தானது. அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசொமதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

டிஜிட்டல் டெரஸ்ட்ரியல் தொலைக்காட்சி ஒளிபரப்பு திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட மற்றும் பற்றாக்குறையான அதிர்வெண்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளமாக இருக்கும் டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தை ஆதரிக்கும் ஒரு திட்டமாகும். இயற்கை பேரழிவுகள் குறித்த தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு உள்ளடக்கங்களை வழங்குவதன் மூலமும், ஒளிபரப்புத் துறையில் ஆரோக்கியமான போட்டி சூழலைப் பாதுகாப்பதன் மூலமும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இந்த திட்டம் பங்களிக்கிறது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையே இருதரப்பு ஒப்பந்தம் முடிவடைந்ததிலிருந்து இன்று ஆலோசகர் ஒப்பந்தம் கையெழுத்திட 10 ஆண்டுகள் ஆனது என்பதைக் குறிப்பிட்டு, இந்தத் திட்டம் மேலும் தாமதமின்றி செயல்படுத்தப்பட வேண்டும் என்று தூதுவர் இசொமதா வலியுறுத்தினார். இலங்கை மக்களின் நலனுக்காக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தை அடைவதில் இந்த திட்டத்தை நிலையான முறையில் செயல்படுத்த சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் நெருக்கமாக இணைந்து செயல்படுவார்கள் என்று அவர் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.



## இந்தியா – இலங்கைக்கு இடையே

# 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றப்பட்டன

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறு துறைகளில் கைச்சாத்திடப்பட்ட 07 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி முன்னிலையில் சனிக்கிழமை (05) பரிமாற்றப்பட்டன.

இந்திய-இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் வலுசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு, சுகாதாரம் ஆகிய துறைகள் மற்றும் நன்கொடை உதவிகள் தொடர்பில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றப்பட்டன.

01- மின்சார இறக்குமதி/ஏற்றுமதிக்கான உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட (HDVC) இடை இணைப்பைச் செயல்படுத்துவதற்கான இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால மற்றும் இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

02- டிஜிட்டல் பரிமாற்றத்திற்காக மக்கள் மட்டத்தில் செயல்படுத்தப்படும் வெற்றிகரமான டிஜிட்டல் தீர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

03- திருகோணமலையை வலுசக்தி மையமாக மேம்படுத்துவதில் ஒத்துழைப்புக்காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால, இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் காலித் நசார் அலமேரி ஆகியோர் இந்தப் பரிமாற்றத்தை மேற்கொண்டனர்.

04- - பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். சம்பத் துய்யகொந்த மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

05- இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சிற்கும் இலங்கை சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கும் இடையிலான சுகாதாரம் மற்றும் மருந்துத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

06- மருந்து விதிமுறைகள் ஒத்துழைப்புக்காக இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சின் மருந்து விதிமுறைகள் ஆணைக்குழுவிற்கும் இலங்கையின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

07- கிழக்கு மாகாணத்தில் பல்துறை நன்கொடை உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" (*Friendship Of Centuries Commitment to Prosperous Future*) என்ற கருத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்ட இந்தியக் தூதுக்குழு இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## குழுவினருக்கு சிறப்பு வரவேற்பு...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் வேண்டுகோளுக்கு அமைவாக இலங்கைக்கான அரச விஜயமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வெள்ளிக்கிழமை (04) இரவு வந்தடைந்தார். விமான நிலையத்தில் வைத்து அவருக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர், விருந்தினர் புத்தகத்தில் தன்னுடைய வரவை பதிவிட்டார்.

பிரதமர் மோடியை, விமான நிலையத்தில் வைத்து, அமைச்சர்களான விஜித ஹேரத், நலிந்த ஜயதிஸ்ஸ, ராமலிங்கம் சந்திரசேகர், சரோஜா சாவித்திரி போல்ராஜ், கிரிஷாந்த அபேசேன ஆகியோரும் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோர் வரவேற்றனர்.



## 19 வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு மரியாதை...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அழைப்பை ஏற்று அரச விஜயமாக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் சனிக்கிழமை (05) முற்பகல் நடைபெற்றது.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் 'நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு' (Friendship Of Centuries Commitment to Prosperous Future) என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த விஜயத்தை மேற்கொள்கிறார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, குதிரைப்படையை முன்னிலையாகக் கொண்டு சுதந்திர சதுக்க வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் இந்தியப் பிரதமருக்கு சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

இதனையடுத்து, இரு நாடுகளினதும் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்ட பின்னர் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பமானது.

இதன்போது 19 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகியோர் பிரமுகர்களுக்கான கௌரவத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, இருநாட்டுத் தலைவர்களும் இருதரப்பு பிரதிநிதிகளை அறிமுகப்படுத்தினர்.

## ஜனாதிபதி செயலகத்தில்...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி, ஜனாதிபதி செயலகத்துக்கு, சனிக்கிழமை (05) வருகை தந்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த இந்தியப் பிரதமருக்கு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.



## IPKF நினைவிடத்தில் அஞ்சலி...

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பத்தரமுல்லையில் உள்ள IPKF நினைவிடத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மலர் வளையம் வைத்து, சனிக்கிழமை (05) அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இலங்கையின் அமைதி, ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்காக தங்கள் இன்னுயிரை ஈந்த இந்திய அமைதி காக்கும் படையின் துணிச்சலான வீரர்களை நாங்கள் நினைவு கூர்கிறோம். அவர்களின் அசைக்க முடியாத துணிச்சலும் அர்ப்பணிப்பும் நம் அனைவருக்கும் உத்வேகத்தின் ஆதாரமாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்கா

## ட்ரம்புக்கு எதிராக
# அமெரிக்காவில் போராட்டம்




டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கோடீஸ்வரர் எலான் மஸ்க் இருவருக்கும் எதிராக அமெரிக்கா முழுவதும் பெரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2ஆம் திகதியன்று, இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் மீது கூடுதல் வரிகளை விதித்தார்.

அமெரிக்கா மீது மற்ற நாடுகள் அதிக வரிகளை விதிப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். இந்தியா மீது 26 சதவீத வரி விதிக்கப்படுவதாக அறிவித்தார்.

இதற்கு உலக நாடுகள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. உலகெங்கிலும் பங்குச் சந்தையும் ட்ரம்ப் அறிவிப்பால் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன.

இந்நிலையில், டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கோடீஸ்வரர் எலான் மஸ்க் இருவருக்கும் எதிராக அமெரிக்கா முழுவதும் பெரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஹான்ட்ஸ் ஆப் என்ற எதிர்ப்பு பேரணி, அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பேரணியில் அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டவர்களும், உள்ளூர் ஆதரவாளர்களும் பங்கேற்றுள்ளனர்.

அமெரிக்காவில் இடம்பெற்ற மிகப் பெரிய போராட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இது அமெரிக்கர்களிடையே அதிகரித்து வரும் விரக்தியைக் குறிக்கிறது என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல்

## உதவிக் குழு ஊழியர்கள்
# 15 பேர் படுகொலை

காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்து வந்த ஊழியர்கள், இஸ்ரேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட வீடியோ வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மார்ச் 23ஆம் திகதி, காசாவில் உள்ள ராஃபா நகரத்தில் அம்பியூலன்களில் சென்றுகொண்டிருந்த உதவுக் குழுவினர் மீது இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் ரெட் கிரசண்ட் ஊழியர்கள் 8 பேர், பாதுகாப்பு அவசரப் பிரிவை சேர்ந்த 6 உறுப்பினர்கள் மற்றும் ஐ.நாவின் UNWRA சேர்ந்த ஊழியர் ஒருவர் என மொத்தம் 15 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்கள் உதவிக் குழுவைச் சேர்த்தவர்கள் என்று தெரிந்தே இஸ்ரேல் வேண்டுமென்றே அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

ஆனால், சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கள் வீரர்களை நெருங்கி வந்த வாகனங்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

உதவிக்குழுவினர் 15 பேரை படுகொலை செய்தது அம்பலமாகியுள்ளது. இதனால் சர்வதேச அளவில் கண்டங்கள் எழுந்து வருகின்றன. இந்த காணொளி குறித்து இஸ்ரேல் இன்னும் எனது விளக்கமும் அளிக்கவில்லை.



மியான்மர்

## மியான்மர் நிலநடுக்கம்:
# 30 இலட்சம் பேர் பாதிப்பு

மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால், இதுவரை 3,354 பேர் உயிரிழந்ததுடன், 4,508 பேர் காயமடைந்து உள்ளனர். மேலும், 220 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்நாட்டு அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு வாரம் ஆகியும், பலருக்கும் புகலிடம் எதுவும் இல்லை. இதனால், அவர்கள் தூங்குவதற்கும் போதிய வசதி இல்லை. வீடுகளை இழந்து பலரும் தவித்து வருகின்றனர். நிவாரண பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு உள்ளன. எனினும், மக்கள் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். இந்த நிலநடுக்கத்திற்கு 30 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கக் கூடும் என ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போரால் மியன்மார் பாதிக்கப்பட்டு உள்ள சூழலில், தகவல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு இணையதள சேவையும் நிறுத்தப்பட்டது. இதனால், சேத விவரங்கள் பற்றிய தகவல்கள் வெளிவருவதிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்நாட்டில், ஏற்பட்டு உள்ள உள்நாட்டுப் போரால் 30 இலட்சம் பேர் புலம்பெயர்ந்து உள்ளனர்.

கர்நாடகா

## சிறையில் அடைக்கப்பட்ட கணவர்:
# மனைவி உயிருடன் வந்ததால் பரபரப்பு

கர்நாடகாவில், மனைவியைக் கொன்றதாகக் கணவர் ஒன்றரை ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், மனைவி உயிருடன் நீதிமன்றத்துக்கு வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து மீண்டும் வழக்கை விசாரிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்நாடக மாநிலம், குடகு மாவட்டத்தில் உள்ள குஷால் நகரை சேர்ந்த விவசாய கூலியான குருபர சுரேஷ் (38), தனது மனைவி மல்லிகெ (32) உடன் அங்கு வசித்து வந்தார். கடந்த 2020ஆம் ஆண்டு, குருபர சுரேஷ் தனது மனைவியைக் காணவில்லை என, குருபர சுரேஷ் குஷால் நகர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதுகுறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வந்தனர். இதனிடையே, 2021ஆம் ஆண்டு காவிரி ஆற்றில் அழுகிய நிலையில் ஒரு பெண்ணின் சடலம் கிடைத்துள்ளது. அதனைக் கைப்பற்றிய பொலிஸார், அந்த உடல் காணாமல் போன மல்லிகெவின் உடல் என உறுதி செய்தனர்.

இதையடுத்து, குருபர சுரேஷ் தனது மனைவி மல்லிகெவை கொன்று ஆற்றில் போட்டதாக பொலிஸார் அவரை கைது செய்தனர். அவரை அடித்து சித்திரவதை செய்து, வாக்குமூலமும் வாங்கினர்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் 1ஆம் திகதியன்று, இவ்வழக்கில் திடீர் திருப்பமாக குருபர சுரேஷ் தனது மனைவி மல்லிகெவை மடிகேரியில் உள்ள ஒரு உணவகத்தில் பார்த்துள்ளார். அதனை புகைப்படம் எடுத்து, பொலிஸாருக்கு ஆதாரத்துடன் அனுப்பியுள்ளார். இருப்பினும், பொலிஸார் அதனை ஏற்கவில்லை. இந்நிலையில், வெள்ளிக்கிழமை (5) இவ்வழக்கு மைசூரு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.



உத்தரப் பிரதேசம்

## மகா கும்பமேளா புனித நீர்
# ஜேர்மனிக்கு அனுப்பி வைப்பு

மகா கும்பமேளா நடைபெற்ற திரிவேணி சங்கமத்தின் புனித நீருக்கான தேவை வெளிநாட்டில் அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டும் வகையில், 1,000 போத்தல்கள் ஜேர்மனியில் உள்ள பக்தர்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, உத்தரப் பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உபி. அரசு மேலும் கூறியுள்ளதாவது:

"இந்த தெய்வீக நிகழ்வின் ஆன்மிக சாரத்தை, திருவிழா மைதானத்திற்கு அப்பாலும் நீட்டிக்கும் வகையில், தீயணைப்புத் துறை மூலம் உ.பி.யின் 75 மாவட்டங்களுக்கும் திரிவேணியின் புனித நீர் விநியோகிக்கப்பட்டது.

"இப்போது, இந்த புனித நீர் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுகிறது.

முதல் முறையாக, ஜேர்மனியில் உள்ள பக்தர்களுக்கு 1,000 போத்தல்களில் மகா கும்பமேளா திரிவேணி சங்கமத்தின் புனித நீர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"மகா கும்பமேளா முடிந்த பிறகு, மாநிலம் முழுவதும் உள்ள பக்தர்களுக்குப் புனித நீரை மகா பிரசாதமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என கூறியுள்ளது.



## யாழில். சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு
# "மோடியின் ஆதரவு தேவை"

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், 1996 உலகக் கோப்பை வென்ற கிரிக்கெட் அணி உறுப்பினர்களுக்கும் இடையே கொழும்பில். சனிக்கிழமை (05) சந்திப்பு இடம்பெற்றது

இதன்போது, யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவை கோரியதாக இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூர்யா X தளத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை நிறுவுவதற்கு இந்திய பிரதமரின் ஆதரவை நான் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சந்திப்பை "உண்மையிலேயே மறக்கமுடியாத மற்றும் ஊக்கமளிக்கும் அனுபவம்' மேலும் சவாலான காலங்களில் இந்தியா இலங்கைக்கு அளித்து வரும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி" என்றும் குறிப்பிட்டுள்ளார்.






# மருதமுனையில் மின்னொளியில் அங்குரார்ப்பண போட்டி

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனை மசூர் மௌலானா மைதானம் மின்னொளி மைதானமாக அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர், மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகம் மற்றும் கல்பனா விளையாட்டுக் கழகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த மின்னொளியிலான அங்குரார்ப்பண ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும், மருதமுனை தெரிவு அணிக்குமிடையிலான வியாழக்கிழமை (03) நடைபெற்ற சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிகழ்வில், மசூர் மௌலானா மைதானத்திற்கு நிரந்தர மின்னொளிக் கம்பங்களை பொருத்துவதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்ததற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு மருதமுனை விளையாட்டு சமூகம் நன்றி பாராட்டி கௌரவித்தனர்.

## கட்டார் கிரிக்கெட் சபையின் தொடரில்
# நடுவர் அபூபக்கர் முஹம்மட் றிலாஸ்

■ பாறுக் ஷிஹான்




கட்டார் கிரிக்கெட் கட்டுபாட்டுச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்துக்கு - 10 றமடான் வெற்றிக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியின் நடுவராக இலங்கை சார்பாக அபூபக்கர் முஹம்மட் றிலாஸ் கடமையாற்றியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையால் நடாத்தப்படவுள்ள தரம் 2 பரீட்சைக்கு சில மாதங்களில் கட்டார் கிரிக்கெட் சபை சார்பாகத் தோற்றவுள்ளார். இலங்கை கிரிக்கெட் சபையின் தரம் நான்கு நடுவராகவும், இலங்கை கிரிக்கெட் நடுவர் சங்கத்தின் தரம் இரண்டு நிலை நடுவராக அபூபக்கர் முஹம்மட் றிலாஸ் கடமையாற்றுகிறார்.

## ஐ.பி.எல்:
# மும்பை இந்தியன்ஸ் குழாமில் இணைந்த பும்ரா



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) மும்பை இந்தியன்ஸ் குழாமில் சனிக்கிழமை (05) ஜஸ்பிரிட் பும்ரா இணைந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மருத்துவப் பணியாளர்களின் அனுமதியையடுத்தே குழாமில் பும்ரா இணைந்துள்ளார்.

பும்ராவின் உடற்றகுதியைச் சோதிக்க அவர் ஒன்று அல்லது இரண்டு பயிற்சிப் போட்டிகளில் விளையாடுவதாக இருந்தது. இந்நிலையில் பெங்களூருவிலுள்ள சிறப்பு மய்யத்தில் பும்ரா பயிற்சிப் போட்டியில் விளையாடினாரா அல்லது மும்பை இந்தியன்ஸில் விளையாடுவாரா என்பது தெளிவில்லாமலுள்ளது.

## ஐ.பி.எல்:
# பஞ்சாப்பை வீழ்த்திய ராஜஸ்தான்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), முல்லான்பூரில் சனிக்கிழமை (05) நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்.

ராஜஸ்தான்: 205/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் 67 (45), ரியான் பராக் ஆ.இ 43 (25), சஞ்சு சாம்சன் 38 (26), ஷிம்றோன் ஹெட்மயர் 20 (12), துருவ் ஜுரேல் ஆ.இ 13 (05), நிதிஷ் ரானா 12 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன் 2/37 [4], அர்ஷ்டீப் சிங் 1/35 [4], கிளென் மக்ஸ்வெல் 0/6 [1])

பஞ்சாப்: 155/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: நெஹால் வதேரா 62 (41), கிளென் மக்ஸ்வெல் 30 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஃப்ரா ஆர்ச்சர் 3/25 [4], சந்தீப் ஷர்மா 2/21 [4], மகேஷ் தீக்‌ஷன 2/26 [4], வனிது ஹசரங்க 1/36 [4])

போட்டியின் நாயகன்: ஜொஃப்ரா ஆர்ச்சர்

இந்நிலையில் சென்னையில் நடைபெற்ற மற்றைய போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இதேவேளை மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 07, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.